செ.வெ.எண். 413

22.05.2010

# மங்களூர் விமான விபத்தில் இறந்தவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் இரங்கல்

22-5-2010

இன்று காலை 6.30 மணி அளவில் துபாயிலிருந்து மங்களூர் வந்த ஏர் இந்தியா விமானம் தரையிறங்கும்போது ஓடுதளத்தில் நிலை தடுமாறி ஓடி விபத்துக்குள்ளானதில் சுமார் 160 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் உயிரிழந்த துயரச் செய்தியை அறிந்து நான் மிகுந்த வருத்தமும், அதிர்ச்சியும் அடைந்தேன். இந்த விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும், அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் அளித்திடவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாத வண்ணம் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என விழைகிறேன்.

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9